**புதுச்சேரி அரசு**
**தொழிலாளர் துறை**
**வேலைவாய்ப்பு அலுவலகம்**

## செய்தி குறிப்பு

## தனியார் நிறுவனம் மூலம் வேலை வாய்ப்பிற்கு தொழிலாளர் துறை ஏற்பாடு

புதுச்சேரி தொழிலாளர் துறை வேலைவாய்ப்பகம், தனியார் நிறுவனங்களில் பணியில் சேருவதற்கான ஏற்பாடுகளை சிறப்பு வேலை வாய்ப்பு முகாம்கள் வாயிலாக செய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக புதுச்சேரியில் உள்ள **ICICI Bank, Chennai** நிறுவனத்தின் 150 காலியிடங்களை நிரப்புவதற்காக ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் 08.06.2013 (சனிக்கிழமை) அன்று வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைவாய்ப்பு முகாம் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற உள்ளது.

இந்நேர்காணலில் **ICICI Bank, Chennai** நிறுவனத்திற்காக 20 வயதிலிருந்து 26 வயது நிரம்பிய ஏதாவது ஒரு பட்டம் (பொறியியல் பட்டம் தவிர) படித்து முடித்த ஆண்கள் / பெண்கள் **Junior Sales Officer** பணிக்காக தேர்வு செய்ய ஏற்பாடு செய்யபட்டுள்ளது. தேர்வு செய்யபட்டவர்களுக்கு ரூ.15,000/- மாத ஊதியமாக வழங்கப்படும். கலந்து கொள்பவர்கள் தங்களது **Resume (both Hard & Soft copy)**, கல்வித் தகுதிக்கான உண்மை/நகல் சான்றிதழ்கள் மற்றும் இரு புகைப்படங்களுடன் வரவும்.

எனவே, மேற்கூறிய கல்வி மற்றும் வயது வரம்பில் உள்ள ஆண்கள்/பெண்கள் இந்நேர்காணல்களில் கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(G. ஸ்ரீநிவாஸ்)
இயக்குனர்
வேலைவாயப்பு மற்றும் பயிற்சி